1036

Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

பத்திராதிபர்: தி. ஆதி[illegible]னர்.

புத்தகம் 7 } இரத்தாக்ஷி௵ சித்திரை௴
1924௵ ஏப்ரல்௴ { சஞ்சிகை 1

30 MAY 1924

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 1
2.	தந்தைசொல்மிக்க மந்திரமில்லை	... 2
3.	தருமசீலன் 7-வது ஆண்டு	... 3
4.	தருமசீலன் வாழ்த்துப்பா	... 3
5.	ஸ்ரீ ஜைன ஸித்தாந்த ப்ரவேசிகா	... 4
6.	சிக்ஷை	... 5
7.	நிஜமான சுகம் எது	... 7
8.	இரகு வம்சம்	... 8
9.	ஞானதீபம்	... 13
10.	ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா	... 21

வருஷசந்தா ரூபா 1.] 1924. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS, MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராத நூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள் முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சி௵ சித்திரைமீ 1924௵ ஏப்ரல்மீ	சஞ்சிகை 1.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

தானம், சீலம், தவம், இறைவர் பூசனை, நல்வினை இவற்றின் பயன்.

" இந்நால்வர் துணைவியராக் காதல் மகனிவனை வுடையார் போகிப்
பொன்னார மார்பிற் புரந்தரராய்ப் பூமி முழுது மாண்டு
மன்னாகி முக்குடைக்கீழ் வாமன் சிறப்பியற்றி வரம்பிலின்பம்
பின்னை விளைவித்துப் பிறவா வுலகெய்தல் பேசலாமே."

(இ-ள்.) "மேற்கூறிய தானம், சீலம், தவம், இறைவர் பூசனை என்னும் மனைவியராகிய இந்நால்வரையும் துணைவியராகக்கொண்டு, அன்புள்ள மகன், நல்வினையாகிய இவனை உடையவர்கள், இவ்வுலகத்தைவிட்டுச் சென்று சுவர்க்கத்தை யடைந்து, பொன்மாலை யணிந்த மார்பினையுடைய இந்திரராய், அந்தச் சுவர்க்க முழுவதையும் ஆண்டு, பின் சக்கரவர்த்தியாய்ப் பூமி முழுவதையும் ஆண்டு, முக்குடை நிழலின் கீழ் வீற்றிருக்கின்ற அருகக்கடவுளுக்குப் பூசனைகளைச் செய்து, முடிவில்லா இன்பத்தை விளைவித்துப் பின்பு, பிறவாஉலகமாகிய மோக்ஷத்தை அடைதல் உண்மையென்று கூறலாம்." என்பதாம்.

தானம், சீலம், தவம், இறைவர் பூசனை ஆகிய இந்நான்கையும் செய்து, அவற்றாலுண்டாகிய நல்வினையை அடைந்தவர்கள், சுவர்க்கத்தில் இந்திரராகிப் பின்பு சக்கரவர்த்திகளாய்ப் பூமியிற்பிறந்து அருகர்பூசனை இயற்றி மோக்ஷத்தை அடைவர் என்பது இதன் கருத்து. போகி-போய். புரந்தரர்-இந்திரர். மன்-அரசன், சக்கரவர்த்தி. வாமன்-அருகக்கடவுள். வரம்பில் இன்பம்-அதீதாவத்தை; அதாவது முடிவிலா இன்பம். 'எய்தல் பேசலாமே' என்பதற்கிடையில், 'உண்மை யென்று' என்பது இசை யெச்சமாக வருவித்துரைக்கப் பட்டது.

(சீவகசிந்தாமணி 1548)

210457

தருமசீலன்.

இரத்தாட்சிஸூ சித்திரைமீ".

"தந்தைசொல் மிக்க மந்திர மில்லை."

இதன் பொருள்:—"தந்தை-தகப்பனுடைய, சொல்-வார்த்தையைக் காட்டினும், மிக்க-மிகுந்த, மந்திரம்-(தியானஞ்செய்து பிள்ளையாயிருப்பவர்கள் உறுதியாகப் பற்றத்தகுந்த) மந்திரமானது, இல்லை-இல்லையாம்" என்பதாம்.

பிள்ளைகளுக்குத் தந்தையாயிருப்பவன், அவர்களை வளர்த்து நன்மார்க்கத்திற் செலுத்தத்தக்க உரிமை பூண்டவனாதலின், அவன் அவர்களுடைய க்ஷேமத்தை விருத்தி செய்பத்தக்க நன்மார்க்கங்களையே அவர்களுக் குபதேசிப்பான்; மற்றவர்கள் அவ்வளவு சிரத்தையாக அவர்களுடைய விருத்திக்கான மொழிகளைக் கூறமாட்டார்கள். ஆதலால், விருத்தி யடையவேண்டிய பிள்ளைகள், தந்தையின் வார்த்தையை வேதவாக்கியமாகிய மந்திரமாகக் கொள்ளவேண்டும். தந்தையின் வார்த்தையைப் பிள்ளையானவன், உறுதியாகப் பற்ற வேண்டுமென்பது பற்றி அது மந்திரமெனக் கூறப்பட்டது. மற்ற மந்திரங்களைக் காட்டினும் இது அதிகப்பலனைக் கொடுக்கக்கூடியதாதலின் இதைக்காட்டினும் மிகுந்தபலனைக் கொடுக்கக்கூடிய வேறொரு மந்திரமுமில்லையெனக் கூறினார் ஒளவைப்பிராட்டியார். இங்ஙனம் தந்தை சொற்கடவாது நடக்கும் பிள்ளைகள் பல நன் மார்க்கங்களிலும் விருத்தியடைந்து சுகம் பெறுவார்கள். மறுமையிலும் நன்மையடைவார்கள். தந்தை சொல்லைக்கடந்து நடக்கும் பிள்ளைகளோ இம்மை மறுமை ஆகிய இரண்டிடங்களினும் சுகம்பெறமாட்டார்கள். இக்காலத்தில், தந்தைசொல்லுக் கடங்காது, தங்கள் தங்கள் மனம்போல் நடக்கும் பிள்ளைகள் தீயவழிகளிற் பிரவேசித்துப் பற்பல துன்பங்களை அடைவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். ஆதலின் நன்மையை அடைய விரும்பும் பிள்ளைகள் அனைவரும் ஒளவைப் பிராட்டியார் கூறிய இந்நீதியைக் கடைப்பிடித்தொழுகி இவ்வுலகில் நற்சுகத்தையும், மறுமையில் இன்பத்தையும் அடைவாராக. (திருவருட்சகாயம்.)

தருமசீலன் 7-வது ஆண்டு.

இறைவன் கிருபையால் நம் சீலனுக்கு 6-வது வருடம் முடிந்து இந்தச் சித்திரையில் 7-வது ஆண்டு ஆரம்பமாகின்றது. பத்திரிகைகளைப் படிப்பதால் பல நன்மைகளுண்டென்பதை நம் தமிழ்நாடு நன்குணர்ந்து வருகின்றது. ஒவ்வொரு சிறு கிராமத்திலிருக்கும் ஜனங்களுங்கூட பத்திரிகை படிப்பதில் மிக விருப்புடையவர்களாயிருந்து வருகின்றார்கள். அதனால் நம் நாட்டினர் பல பாஷைப் பத்திரிகைகளையும் ஆதரித்துவரும் நோக்கம் கொண்டிருக்கின்றனர். அந்நோக்கத்தினாலேயே தமிழபிமானிகள் பலரும் நம்சீலனை சென்ற ஆறுவருடங்களாகப் பலவிதத்திலும் ஆதரித்து வருகின்றனர். இதுபற்றி இவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். சந்தா நேயர்களனைவரும் இனிமேலும் எப்பொழுதும், முன்போலவே சீலனை ஆதரித்துவருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

தருமசீலன் வாழ்த்துப்பா.

இஃது

மங்கநல்லூர், "தமிழ் நாவலர்"

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளையவர்க ளியற்றியது.

ஆசிரிய விருத்தம்.

சீரோங்கி வளருமா சென்னையி லுதித்துநம்
தேசங்க ளெங்கு முலவித்
தேன்பாகு கனிபலா மாகதலி யின்சுவை
சேர்ந்ததமி ழினிமை கொண்டு
பாரோங்கு மக்களுக் கன்னையென வேசென்று
பகலிர வெலா மூட்டிநற்
பான்மைமிகு நீதிகள் பகர்ந்துவரு போதகன்
பரிதிநிகர் தருமசீலன்
நாரோங்கி மூவிரண் டாண்டுபுகழ் மிகஆதி
நயினாரின் உதவி கொண்டு
நாட்டமிகு நன்னடை பாப்பியெக் கெடுதியும்
நண்ணாம லேயகற்றிப்
பேரோங்கி யிசையுடன் நிலைபெற்ற வாறுபோல்
பின்புகுறை வின்றி உலகில்
பெரிதாக வெளிவந்து திருவருள் தினந்தினம்
பெருகிமிக வாழ்க மாதோ.

ஸ்ரீ ஜைன ஸித்தாந்த ப்ரவேசிகா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-12, பக்கம்-266.)

37. ப்ர:—சாத்ய மென்று எதற்குப் பெயர்?

உத்:—இஷ்டமாய், அபாதிதமாய், இன்னும், அசித்தமாய் இருப்பதே சாத்யம்.

38. ப்ர:—இஷ்டமென்றூ லென்ன?

உத்:—வாதி, ப்ரதிவாதிகள் எதைச் சித்தம் செய்வதற்கு இச்சிக்கிறார்களோ அதற்கே இஷ்டமென்று பெயர்.

39. ப்ர:—அபாதிதமென்று எதற்குப் பெயர்?

உத்:—எது, வேறே ப்ரமாணங்களால் பாதிக்கப்படுவதில்லையோ அதற்கு அபாதித மென்று பெயர். உதாஹரணம், நெருப்பில், சீதளத்தை அறிவது ப்ரத்யக்ஷ விருத்தமா யிருப்பதினாலே சீதளம் சாத்யமாக மாட்டாது.

40. ப்ர:—அசித்த மென்று எதற்குப் பெயர்?

உத்:—எது இரண்டாவது ப்ரமாணங்களினின்றும் சித்தமாவதில்லையோ அதற்கு அதாவது எக்காரணத்தினாலும் நிச்சயமாவதில்லையோ அதற்கு அசித்த மென்று பெயர்.

41. ப்ர:—அநுமான மென்றூ லென்ன?

உத்:—சாதனத்தின் மேலிருக்கிற சாத்யத்திற்கு ஞானமாவதற்கே அநுமான மென்று பெயர்.

42. ப்ர:—ஹேத்வாபிஞான மென்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த ஹேதுவானது தோஷத்தோடு கூடியிருப்பதோ, அதற்கே, ஹேத்வாபிஞான மென்று பெயர்.

43. ப்ர:—ஹேத்வாபிஞானத்தில் எத்தனை பேதம்?

உத்:—1 அசித்த, 2 விருத்த, 3 அனைகாந்திக (வ்யபிசாரி), 4 அகிஞ்சித்கா, என்று நான்கு பேதங்களுண்டு.

44. ப்ர:—அசித்த ஹேத்வாபாசத்தினுடைய லக்ஷணமென்ன?

உத்:—எவற்றின் ஹேதுவிலே அபாவமிருக்கிறதோ அதாவது ஹேதுவினுடைய அஸ்தித்வத்திலேடுகூட சம்சயமிருக்கிறதோ அதற்கே அசித்தஹேத்வா

பாசமென்று பெயர். உதாஹரணம்: சப்தம் நிச்சயமாய் இருக்கிறது. எனினும் "சப்தம்" என்பது காதுக்கு விஷயமாகுமே யல்லாமல், நேத்ரத்துக்காகாது. ஆகையினாலே, மேல் சொன்ன வாக்கியத்தில் "நேத்ரத்திற்கே விஷயம்" என்கிற ஹேது அசித்தஹேத்வாபாசமாயிற்று.

45. ப்ர:விருத்த ஹேத்வாபாசமென்று எதற்குப் பெயர்?

உத்:—சாத்யத்திற்கு விருத்தமாயிருக்கிற பதார்த்தங்களுடனே எதனுடைய வ்யாப்தி இருக்கிறதோ அதற்கே ஹேத்வாபாசமென்று பெயர். "சப்தம்" நித்யமாயிருக்கிறது. ஏனென்றால், பாரிணாமியா இருப்பது பரிணாமிகவ்யாப்தி. அநித்யத்தோடு இல்லாமல் நித்யமாவதில்லை. ஆகையினாலே இந்த அனுமானமுள்ள மேல் சொன்ன வாக்யத்தில், "நித்யத்வத்தினுடைய ஹேதுவான "பரிணாமி" என்பது விருத்த ஹேத்வாபாசமாம்.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்,
அனந்தபுரம் ஸ்கூல்டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

சிக்ஷணா.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-12, பக்கம் 267)

முன் சஞ்சிகையில் வித்யாப்ரசாரம் அவசியம் என்பது சொல்லப்பட்டது. அப்படி வித்தையைக் கற்பித்தபோதிலும், சகவாசத்தையும் கவனித்து நடக்கவேண்டும். சகவாசமானது, துர்ஜன சகவாசமென்றும், சஜ்ஜன சகவாசமென்றும், இருவகையுண்டு. இந்த ப்ரபஞ்சத்தில், மனுஷ்யர்களுக்கு சஜ்ஜனர்களுடைய சகவாசத்தினின்றும் சத்புத்தியும், துர்ஜனர்களுடைய சகவாசத்தினின்றும் துர்ப்புத்தியும், ப்ராப்தமாகின்றன. வித்யாவந்தர்களுடைய சகவாசத்தினின்றும், சுஞானமும், கள்ளர்களுடைய சகவாசத்தினின்றும், திருட்டுத்தனமும், வியபிசாரியினுடைய சகவாசத்தினின்றும், வ்யபிசாரத்தனமும் மனிதர் அடைகிறார்கள். இதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காணலாம். விவேகிகள் துர்ஜனர்களுடைய சகவாசத்

தைவிட்டு, சஜ்ஜனர்களுடைய சகவாசத்தையே செய்யவேண்டும். ஏனென்றால்,

"𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌿𑌹𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌽𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍
𑌮𑌣𑌿𑌨𑌾 𑌭𑍂𑌷𑌿𑌤 𑌸𑌰𑍍𑌪𑌃 𑌕𑌿𑌮𑌸𑍌 𑌨 𑌭𑌯𑌙𑍍𑌕𑌰𑌃"

என்று சுலோகம் கூறப்படுகிறது.

ரத்னமணியினலே அலங்க்ருதமாகிய சர்ப்பத்தை எப்படித் தூரத்தில் விட்டுவிடுகிறேமோ அதுபோல துர்ஜனன், வித்தையினலே அலங்கிருதனுயிருந்தபோதிலும், தனவந்தனுயிருந்தபோதிலும் அவனை விட்டுவிடவேண்டும். இன்னும் அவனிடத்தில் நிர்த்தயவு, நிஷ்கார்ண கலகம், பரத்ரவ்யாபஹாரம், பாரங்கனுசம் போகாபிலாஷை, சஜ்ஜனர்களிடத்தில் அசகதம், பரநிந்தை, அதிகமான தனகாம்க்ஷை, பிரசண்டகோபம், ஹிம்சானந்தம் முதலாக இன்னும் அநேகம் துர்க்குணங்கள் ஸ்வபாவ குணங்களாயிருக்கின்றன. இப்பேர்ப்பட்டவர்களுடைய சகவாசமானது, காலை நிழல்போல ப்ராரம்பத்தில் அதிக பிரயோஜன மிருப்பதுபோல காண்பித்தாலும், அது காலக்ரமத்தில் நாசத்திற்கே காரணபூதமாகும்; துர்ஜனர்கள், தங்களுடைய துஷ்காரியத்தில் ப்ரவேசிக்காம லிருப்பவனை மந்தனென்பார்கள்; வ்ரதாசரணையி லிருப்பவனை கபடி என்பார்கள். யுக்தாயுக்த விசாரவார்த்தை பேசுகின்றவனை அசம்லப்த ப்ரலாபி என்பார்கள்; ப்ரியவாதியை தீனனென்பார்கள்; மனனசீலரான முனிவரைக்கூட புத்திஹீன ரென்பார்கள். துர்ஜனர்களுக்கு ஸ்வகீயமானவர்கள் யாருமில்லை. எப்படி என்றால் சிலர் மன, வசன, காய, சுத்தியினலே ஹிதாசரணையைச் செய்தாலுங்கூட துர்ஜனர், அவர்களை அஹிதரென்பார்கள். எங்ஙனமெனில் சும்மா இருந்தால் ஊமை என்றும், பேசினல் வாக்ஜாலத்தைக் காண்பிப்பதாயும், பொறுமையாயிருந்தால் பேடி என்றும், சூரனுயிருந்தால் தயாசூன்யனென்றும், சொல்வார்கள். ஆதலால் துர்ஜ்ஜனர்களுக்கு அனுவர்த்தியாக இருப்பதற்கு, சாத்யமே இல்லை. இப்பேர்ப்பட்ட துர்ஜனரான நீசர்களை ஆச்ரயித்துக் கொண்டிருந்தால் அடிக்கடி துக்கம் தப்பாமல் வருவதில் சந்தேகமே இல்லை.

"𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑌾𑌧𑍁𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂
𑌪𑌾𑌵𑌕𑍋 𑌲𑍋𑌹𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑍈𑌰𑌭𑌿𑌹𑌨𑍍𑌯𑌤𑍇."

என்கிற சித்தாந்த வாக்யானுசாரமாக, நெருப்பு இரும்போடு சேர்ந்து சம்மட்டியினலே எப்படி அடிபடுகிறதோ அதுபோல இக

லோகத்தில் அடிக்கடி மானஹாநியும், ப்ராப்தமாகிறது. இன்னும் அவர் சேர்க்கை பாத்தில் துர்க்கதியும் அடையச் செய்கிறது. ஆகையினாலே துர்ஜ்ஜனர்களை நிமிஷமாவது ஆஸ்ரயிக்காமல் சாத்ய மிருக்கும்வரை, ப்ரயத்னத்தினாலே சஜ்ஜன சகவாசத்தையே செய்ய வேண்டும்.

சஜ்ஜனர்களுடைய சகவாசமானது மோக்ஷ ஹேதுவானது. அன்னியர்களுடைய குணங்களில் தோஷாரோபணஞ் செய்யாதிருத்தல், அவற்றில் சந்தோஷப்படுதல், வித்யோபதேசகரான குருவினிடத்தில் மதோன்மத்தரா யில்லாதிருத்தல், பக்தி, சிரத்தையில் நம்ரத்வம், த்யூதாதி சப்த வ்யசனங்களில் ஆசக்தி இல்லாமல் மோக்ஷத்திற்குச் சாதகமான ஞானத்தை உண்டுபண்ணுகின்ற வித்தையில் ஆசக்தி, லோகாபவாதத்திற்கு அஞ்சுதல், க்ஷுத்ரதேவதைகளிடத்தில் பக்தி வைக்காமல் சாக்ஷாத் பரமேஸ்வரனிடத்தில் பக்தி வைத்தல், குரு பெரியோர்களிடத்தில் வணக்கம், விபத்துவந்த காலத்தில் தைர்யம், அபிவிருத்தி காலத்தில் க்ஷமை, ப்ராணி ஹிம்சை செய்யாமலிருப்பது, பரத்ரவ்யத்தை அபகரிக்காமலிருப்பது, பரஸ்திரீகளை ஆசரிக்காமலிருப்பது, த்ரவ்யானுசாரமாக தானம் செய்தல், சத்யவசனம், முதலான குணங்கள், சஜ்ஜனருக்கு ஸ்வபாவ சித்த குணங்களா யிருக்கின்றன; இப்பேர்ப்பட்ட சஜ்ஜன சகவாசத்தினின்றும், இந்த சத்குணங்கள் லபிக்கின்றன. சத்குணங்களே, சுயகீர்த்திக்குக் காரணமா யிருக்கின்றன. சஜ்ஜனர்களுடைய சகவாசமானது அபராஹ்னகால நிழலைப்போல ப்ராரம்ப காலத்தில் ஸ்வல்பமாயிருந்து, க்ரமேண, வ்ருத்தியடைகிற ஸ்வபாவமுள்ளதா யிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சத்புருஷர்களை ஆச்ரயிக்கிறவன் மகத்ப்ரகாசத்தை அடைகிறானதலால், புத்திசாலிகள், யுக்தாயுக்த விசாரகராகி சஜ்ஜனர்களுடைய சகவாசத்தையே செய்யவேண்டும்.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

ஸ்ரீவீதராகாய நம:

நிஜமான சுகம் எது?

இந்த ப்ரபஞ்சத்தில் என்ன உத்தேசத்தினின்றும் ஒரு ராஜ்யத்தவர்கள் வேறு ஒரு ராஜ்யத்தின்மேல் தண்டெடுத்துப் போகின்

றனர்? என்ன ஹேதுவினின்றும் பாராஜ்யத்தை பாதாக்ராந்தம் செய்துகொண்டு வ்யாபாரத்தை அதிகப்படுத்தி சம்பத்தை சங்க்ரகம் செய்கின்றனர்? எக்காரணத்தினின்றும், அநேக தருண ஜனங்கள், அதிக கஷ்டப்பட்டாவது இரவுபகலென்று லட்சியம் செய்யாமல் கடினமான பரீட்சையில் மேன்மையடைய யத்தனிக்கின்றனர்? என்ன கல்பனையினின்றும், காமாசக்தர்களான பிக்ஷுகஜனங்கள் "பிக்ஷாம்தேஹி" என்று வீடுவீடாய்த் திரிகின்றனர்? சிலர், என்ன உத்தேசத்தினின்றும் உத்தமோத்தமமான இமாதிகளை மணந்து அநேக மோகத்துக்குட் படுத்துகின்ற வஸ்துக்களினாலே ச்ருங்காரம் செய்கின்றனர்? என்ன உத்தேசத்தினின்றும், நாலக்ஷரம் தெரிந்திருக்கக்கூடிய உத்யோகஸ்தர்கள், பாமர ஜனங்களிடத்தில் ஏராளமான லஞ்சத்தை வாங்குகின்றனர்? இவை யெல்லாம் கேவலம் சுகத்தின்பொருட்டே. சிலர், நமக்குச் சுகம்வேண்டாம்; நாம் பரோபகாரத்தி னிமித்தம் உழைக்கின்றோம் என்று சொல்லக்கூடும். வேறு சிலர், தேச சேவையே தங்கள் பரம கர்தவ்ய மென்றும், அதற்காக இரவும் பகலும், ச்ரமப்படுகிறோ மென்றும் சொல்லக் கூடும். இன்னும் சிலர் நம்முடைய கர்தவ்யத்திற்காக கர்மாவைச் செய்கிறோ மென்று சொல்லிக்கொண் டிருக்கின்றனர். எல்லோருடைய மனதையும் பிளந்து நன்றாக பரீக்ஷித்துப் பார்த்தால் இப்படிச் சொல்கிறவர்களுடைய அந்திமோத்தேசமானது சுகமே என்று விளங்குவதில்லாமல் வேறொன்று மில்லை. அது அவர்களுக்குத் தெரிந்திருக்கட்டும் தெரியாமலிருக்கட்டும்; அவர்கள் சுகத்திற்காக ப்ராணனைக்கூட சங்கடத்திற் குட்படுத்துகின்றன ரென்பது நிர்விவாதமான வார்த்தை.

(இன்னும் வரும்)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்.

அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,

ஜாகீர், ஆரணி.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-12, பக்கம் 261)

(எட்டாவது ஸர்க்கம்.)

அப்பால் இரகு, அழகிய விவாக ஸூத்திரத்தைத் தரித்திருக்கும் அஜனது காத்தில் மற்றொரு இந்துமதியைப் போன்றுள்ள

பூதேவியை (பூமியின் பளுவை) ஒப்புவித்துப் பட்டாபிஷேகஞ் செய்து வைத்தான். இராஜகுமாரர்கள் (விஷமிட்டுக் கொல்லல் முதலிய) தீவினைகளைச் செய்தும் ராஜ்யத்தைத் தன் வசமாக்குவதற்கு முயலுகின்றனரன்றோ? அஜன் முயற்சியின்றியே கிடைத்த ராஜ்யத்தைத் தந்தையின் கட்டளையை மீறக்கூடாதென்ற காரணத்தால் ஏற்றுக்கொண்டனன். பூமிதேவி, வஸிஷ்டர் தெளித்த நீரால் அஜனோடு தானும் அபிஷேகத்தைப் பெற்றதும், பிரகாசமான வளர்ச்சியினால் (சிறந்த கணவனைப்பெற்ற) மகிழ்ச்சியைத் தெரிவித்ததுபோ லிருந்தது. 'அதர்வ' வேதத்திற் கூறியபடி வஸிஷ்டரால் அபிஷேகஞ் செய்விக்கப்பெற்ற அஜராஜன், பகைவரால் நெருங்க முடியாதவனாக ஆயினன்; க்ஷத்திரிய தேஜஸ்ஸுடன் சேர்ந்த பிரும்ம தேஜஸ்ஸானது காற்றுடன் சேர்ந்த தீயைப்போலச் சிறப்புடையதன்றோ?

குடிகள் புதிய அரசனான அஜனை யௌவனமடைந்த இரகுவாகவே நினைத்தனர். ஏனெனில், அவ்வஜன் உருவத்தில் மட்டுமன்றிச் சகல குணங்களிலும் இரகுவை ஒத்திருந்தனன். அஜனோடு சேர்ந்ததும், முதாதைமூலமாய் வந்ததும், ஸம்பத்து மிகுந்துள்ளதுமான ராஜ்யமும் இந்திரிய ஜயத்துடன் கூடின அஜனது புதிய யௌவனமும் ஆகிய இரண்டுமே சுபம்பொருந்திய இரண்டோடு சேர்ந்து மிகச்சிறப்புற்றன. நீண்டகைகளையுடைய அஜன், பலாத்காரம் செய்தால் பயமடைவாளென்று, புதிதாய்வந்த நாட்டுப்பெண்ணைப்போல சமீபத்தில்வந்த பூதேவியைத் தயவோடு (பரிபாலித்தான்.) புஜித்தான். குடிகளுள் ஒவ்வொருவனும் "நான்தான் அரசனுக்குப் பிரியமானவன்" என்றெண்ணினான். கடல், ஆறுகளை அவமதிக்காமைபோல, இவ்வரசனும் ஒருவரையும் திரஸ்காரஞ் செய்யவில்லை. அவ்வேந்தன் மிக உக்ரமாகவும் மிக மிருதுவாகவும் இருக்கவில்லை; ஆனால் நடுநிலைமையிலிருந்துகொண்டு, காற்று மரங்களைப் பிடுங்குவதுபோல, அரசர்களை அழிக்காமலே வணங்கச் செய்தனன். பின்னர் இரகு, தன் புதல்வன், தூய்மையுடன் அமைச்சர் முதலியோரிடம் 'பிரதிஷ்டை' யடைந்திருப்பதை யறிந்து அநித்யமான ஸ்வர்க்க போகங்களிலும் ஆசை வைக்கவில்லை. 'திலீப' வம்சத்தி லுதித்தவர்கள், குணமுள்ள புதல்வரிடம் பூபாரத்தை ஒப்புவித்து, மரவுரியணியும் முனிவர் பதவியை அடைவது வழக்கமேயன்றோ?

பின்பு அஜன் கானகஞ்சென்று வசிக்கவிரும்பிய தந்தையை

தலைப்பாகையினால் விளங்கும் தலையினால் வணங்கி "பிதாவே! தாங்கள் என்னைவிட்டுப் போவது கூடாது" என்று வேண்டிக்கொண்டனன். புத்திரனிடம் பிரியமுள்ள இரகுவும் கண்ணீரைப் பெருக விடும் அஜனது வேண்டுகோளை அங்கீகரித்தனர்; ஆனால் ஸர்ப்பம் உரித்த தோலைக் கிரகிக்காமைபோல, தான்விட்ட ராஜ்ய ஸம்பத்தை மீண்டும் பெறவில்லை.

பின்பு இரகு, *சந்நியாசத்தைப் பெற்று, இந்திரியங்களை ஜயித்தவராய், நகரத்திற்கு வெளியில் ஓர் குடிசையில் வசிக்கலானார்; (புதல்வன் அநுபவிக்கக்கூடிய) நாட்டுப் பெண்ணைப்போல, ஸ்ரீதேவியும் அவரை உபாசிக்கலாயினள். சமனமடைந்த கிழவாசனையும் உதயமடைந்த புது வேந்தனையும் பெற்ற அக்குலமானது, அஸ்தமனமடையும் சந்திரனையும் உதயமடையும் சூரியனையும் பெற்றிருக்கும் ஆகாசத்தை ஒத்திருந்தது. ஜனங்கள் சந்நியாசியாயும் அரசனாயுமுள்ள இரகு அஜன் இருவரையும் பூதலத்தில் பிரவேசித்திருக்கும் 'பிரவிருத்தி நிவிருத்தி' கர்மங்களில் அம்சங்களைப்போலப் பார்த்தனர்.

அப்பால், அஜன், உன்னத பதவியைப் பெறுவதுபற்றி யோசிப்பதற்காக நீதிசாஸ்திரங்களை யுணர்ந்த மந்திரிகளுடன் சேர்ந்தனன்; இரகுவும் அழிவற்ற பதவியைப் பெறுவதற்காக ஆப்தர்களான யோகிகளோடு சேர்ந்தனன். அஜன் பிரஜைகளின் விவகாரங்களைக் கவனிப்பதற்காக தர்மாசனத்தில் அமர்ந்தனன்; இரகு 'தாரணை'யை அப்பியசிப்பதற்காகத் தனிமையில் தருப்பாசனத்தில் அமர்ந்தான். அஜன் தனது பூமியிலிருக்கும் அரசர்களைப் 'பிரபு

---

* 'ப்ராஹ்மணா: ப்ரவ்ரஜந்தி' 'பிராமணர்கள் சந்நியாச மடைகிறார்கள்' "ப்ராஹ்மண: ப்ரவ்ரஜேத் க்ருஹாத்" 'பிராமணன் வீட்டிலிருந்து சந்நியாச மேற்கவேண்டும்' "[illegible]" யமுகத்தி லுதித்தவர்களுக்குச் சந்நியாச தர்மம், என்ற வாக்கியங்களால் பிராமணனுக்கு மட்டும் சந்நியாசமென்று தெரிகிறது. இரகு க்ஷத்திரியனாதலால் சந்நியாசங்கொள்வது கூடாது; ஆயினும் 'யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்' எப்பகலில் வைராக்கிய முண்டாகுமோ, அப்பகலிலேயே சந்நியாச மடையவேண்டும். ப்ராஹ்மண: க்ஷத்ரியோவாபி வைஶ்யோவா ப்ரவ்ரஜேத் க்ருஹாத் பிராமணனயினும், க்ஷத்திரியனயினும், வைசியனயினும் கிருகஸ்தாசிரமத்திலிருந்து சந்நியாசம் பெறவேண்டும்" என்ற வாக்கியங்களால் க்ஷத்திரியனுக்கும் சந்நியாசத்தில் அதிகார முண்டென்பதை இங்கு அறியவேண்டும்.

[stamp]

சக்தி'யின் மகிமையினால் தனக்கு அதீனர்களாகச் செய்தனன்; இரகு 'ஸமாதி'யின் அப்பியாசத்தினால் சரீரத்திலுள்ள *பஞ்சப் பிராணன்களையும் வசப்படுத்தினான். புதியவாசன் பகைவர் செய்யும் சூழ்ச்சிகளின் பயன்களைச் சாம்பலாகச் செய்தனன்; பழைய வாசன் ஞானத்தீயால் கர்மங்களை எரிக்கலானான். அஜன், 'ஸந்தி' முதலிய ஆறு குணங்களையும் அவற்றின் பயனைத் தெரிந்துகொண்ட பிறகு பிரயோகஞ் செய்தனன்; கல்லையும் பொன்னையும் சமமாகக்கொண்ட இரகுவும் 'ஸத்வம், ரஜஸ், தமஸ்' என்னும் முக்குணங்களையும் விகாரமற்றிருக்கும்படி ஜயித்தனன். தீவிர முயற்சியுள்ள புதிய வாசன், பயன்பெறும்வரையில் முயற்சியை விடவில்லை; ஸ்திரமான மனமுடைய பழைய வாசனும் 'பிரம்ம ஸாக்ஷாத்காரம்' ஏற்படும் வரையில் யோகத்தினின்றும் ஒழிவடையவில்லை. இவ்வாறு தடுக்கப்பட்ட முயற்சியையுடைய பகைவரிடமும் இந்திரியங்களிடமும் சாவதானர்களும், அபிவிருத்தி அபவர்க்கம் இவற்றில் பற்றுள்ளவர்களுமான அஜனும் இரகுவும் முறையே இருவகைப் பயனையும் பெற்றனர்.

அப்பால் இரகு, சகலப் பிராணிகளிடமும் சமமான பார்வை (ஞானம் உடையவராய், அஜனுடைய விருப்பத்தின்பேரில் சில வருஷங்களைக் கழித்துவிட்டு, யோக ஸமாதியினால் என்றும் நாசமற்றதும், அவித்தையைக் கடந்ததுமான பரமாத்வை அடைந்தனன். (ஸாயுஜ்ய மடைந்தனன்.) † ஆகிதாக்கினியாகிய அஜன், தந்தை இறந்ததைக் கேள்வியுற்று, வெகுநேரம் கண்ணீரை உதிர்த்தான்; பின்பு அக்னியின்றி அந்தியகாலத்தில் செய்யவேண்டிய கர்மத்தைச் சந்நியாசிகளோடு சேர்ந்து நடத்தி வைத்தனன். 'சிரார்த்தம்' முதலிய பிதிருகாரியஞ் செய்யவேண்டிய விதியையுணர்ந்த அஜன், தந்தையிடம் பக்தியினால் இரகுவுக்கு இறந்த பிறகு செய்யவேண்டிய கர்மங்களைச் சரிவரச்செய்தனன்; ஆனால் யோக மார்க்கத்தினால் சரீரத்தை விட்டவர்கள், புதல்வர் கொடுக்கும் பிண்டத்தை விரும்பிக்கொண் டிருப்பதில்லை. உண்மையையுணர்ந்த பெரியோர், அஜனைப்பார்த்து, "உன் தந்தை உயர்பதவியை அடைந்துவிட்டமையால் நீ வருந்துவதுகூடாது" என்று தேற்றினர்; அதனால் மனோவியாகூலமற்ற அஜன், வில்லை நாணியேற்றியவனாய், உலகத்தைத் தன் கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு செய்தான்.

---

* பிராணன், அபானன், ஸமானன், உதானன், வியானன் என்பவை பஞ்சப்பிராணன்களாம். † ஆகிதாக்கினி = யாகத்தீயை வளர்ப்பவன்.

பூதேவியும் தேஜஸுள்ள இந்துமதியும் மிகுந்த பராக்கிரமுமுடைய அஜனைக் கணவனாகப்பெற்றனர்; அவர்களுள் பூதேவி சிறந்த இரத்தினங்களை உண்டுபண்ணினள். இந்துமதி வீரனான புத்திரரத்நத்தை உண்டாக்கினாள். அவனுக்குத் 'தசரத'னென்று பெயர் வைத்தனர். அவன் சூரியனது ஒளியைப்போன்ற காந்தியையும் பத்துத் திசைகளிலும் பரவிய புகழையும் இராவணன் பகைவனுக்குத் தந்தையாகும் பாக்கியத்தையும் பெற்றவன்; அவ்வஜன் முனிவர்கடனை கேள்வியாலும் தேவர்கடனை வேள்வியாலும் பிதிர்க்கடனைப் புதல்வரைப் பெற்றமையாலும் தீர்த்துவிட்டான்; அதனால் அவன் (கோட்டையில்) பரிவேஷத்தில் இருந்து விடுபட்ட சூரியனைப்போல விளங்கினான். அஜராஜனின் பொருள்மட்டும் பிறருக்கு உபயோகப் படவில்லை; ஆனால் அவனது குணங்களும் பரோபகாரத்தின் பொருட்டே ஆயின; ஏனெனில் அவனுடைய சௌரியம் ஆபத்தடைந்தவர்களின் பயத்தைப் போக்குவதிலும் மிகுந்த சாஸ்திர ஞானம் வித்துவான்களைப் பெருமைப்படுத்துவதிலும் உபயோகப் பட்டன.

அப்பால் ஒருசமயம் தேவர்கோன் இந்திராணியோடு நந்தனவனத்தில் க்ரீடிப்பதுபோல, புதல்வனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்த அஜன், இந்துமதியோடு நகரத்தினருகேயுள்ள உத்யானவனத்தில் க்ரீடிக்கலானான். அப்பொழுது அவனைப் பிரஜைகளும் பின் தொடர்ந்தனர். பின்னர் 'நாரத' முனிவர் தெற்குச் சமுத்திரக் கரையிலுள்ள கோகர்ண க்ஷேத்திரத்தில் வசிக்கும் சிவபெருமானை வீணையினால் துதிப்பதற்காக ஆகாயமார்க்கத்தினின்றும் இறங்கி வந்தனர். அப்பொழுது வேகமான காற்றானது, நாரதரது வீணையின் முனையில் வைக்கபபட்டதும், தேவ புஷ்பங்களால் கோக்கப்பட்டதுமான மாலையை, அதன் வாசனையைப் பெறுவதற்குப் பிரவேசித்ததுபோல அபஹரித்தது (தள்ளியது). மலர்களைத் தொடரும் தும்பிகளால் நிறைந்த நாரத முனிவரின் வீணை, காற்று அவமதித்தமையால் மைமேபாடு கரைந்துவரும் கண்ணீரை உதிர்ப்பதுபோலக் காணப்பட்டது. அந்த தேவஹாரம், சிறந்த * 'மகரந்'தத்தினாலும் வாசனையினாலும் கொடிகளுக்கு வசந்த காலத்தினாலேற்படும் சோபையை அவமதித்துக்கொண்டு, இந்துமதியின் பருத்த கொங்கைகளின முனைகளில் விழுந்து அசையாமல் தங்கி நின்றது.

இந்துமதி, மனோகரமான கொங்கைகளில் தோழியைப்போல்

---

* மகரந்தம் = பூப்பொடி.

வீற்றிருக்கும் மாலையைக் கண்டதும் 'பாவசை'யாகி, இராகுவினுல் கிரகிக்கப்பட்ட 'சந்திரிகை'போல, மோகத்தை யடைந்தனள். இந்துமதி இந்திரியங்களற்ற சரீரத்தோடு விழும்பொழுது கணவனையும் விழச் செய்தனள்; விளக்கின் ஜ்வாலையானது எண்ணெயின் பிந்துவோடு பூமியில் விழுகிறதன்றோ? அத்தோட்டத்தின் ஓடையிலுள்ள பறவைகள், இத்தம்பதிகளின் பக்கத்திலுள்ள பரிஜனங்கள் கதறுவதைக் கேட்டதும் பயந்து, சமமான துக்கமுடையனவைபோல கதறலாயின. பின்பு ஏவலாளர்கள் பன்னீர் தெளித்து விசிறவே, அஜனுக்கு மூர்ச்சை தெளிந்தது; இந்துமதி முன்போலவே இருந்தனள்; சிகித்ஸையானது, ஆயுளின் அவசேஷமிருந்தால் மட்டும் பயனை யளிக்கின்றது. பின்னர் மிகப்பிரேமையுள்ள அஜன், * 'ஸத்துவ' மில்லாமையால் தந்திகளோடு சேர்க்கக்கூடிய வீணைக்குச் சமமான அவஸ்தையுடைய காதலியைக் கைகளாலெடுத்து பழக்கமுள்ள மடியில் வைத்துக் கொண்டனன். அஜன், இந்திரியங்களையிழந்தமையால் நிறம்மாறிய காதலியை மடியில் வைத்திருக்கையில் காலை வேளையில் மலினமான முயல்மறுவைத் தரிக்கும் சந்திரனைப் போலிருந்தான்.

(இன்னும் வரும்.)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondan, P. O.
(via) Nannilam.

ஞானதீபம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-10, பக்கம்-212.)

4-வது அத்தியாயம்.

சந்திரசேகரன்:—புத்திசேனு! இது நல்லயோஜனைதான். அப்படியே செய்வோம். நாம் இம்மரக்கிளைகளில் ஒளிந்து கொண்டிருப்போம். இத்திருடர்களும் இவ்வழியாகத்தான் வருகிறார்கள். இவர்கள் பேச்சை நாம் கவனமாய்க்கேட்டால் இப்பெண்ணைப்பற்றிய விருத்தாந்தம் முழுதும் வெளியாகும். மேலும் இப்பாதகர்கள் இப்பெண்மணிக்கு இன்னவிதமான தீங்கு இழைக்கப்போகின்றனர் என்பதையும் தெரிந்துகொண்டு நாம் அதை விலக்கமுயலலாம். இவ்வாறு சொல்லியபின் மூவரும் மாக்கிளைகளில் மறைந்திருந்தனர். திருடர்கள் அம்மரத்தினடியில் கூடினார்கள்.)

---

* ஸத்துவம் = உயிர் வலி.

வீரன்:—ஏ! இருளா! நம்பகாரியம் முடிஞ்சுது. பொழுது விடிஞ்சதும் மூக்கணை பிள்ளையாருக்கு மோதகம் படைச்சு பூசை நல்லாபோடணும். இக்காட்டிலே நாம்பதானே ராஜா. நம்மை எந் தப்பையல் என்ன செய்யப்போறான். இருளா! நீ இந்த அம்மாளை இட்டுக்குணு, நம்ப ராமசாமி முதலியார் சொன்ன இடத்தில்போய் அவரிடத்தில் விட்டு நம்பளுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை வாங்கிக்கிண்டு வா. அதுக்குள் இன்னம் கொஞ்சநேரம் இங்கே இருந்து அம்படாரதை பார்த்துக்கிண்டு வறேன்.

இருளன்:—சாமி! நான் அப்படியே செய்றேன். (பெண்ணைப் பார்த்து) அம்மா! என்னுடனே வாங்கள். நான் உங்களை ஒன்னும் செய்யமாட்டேன். வாங்கம்மா வாங்க. அழாதிங்க வாங்க. ராமசாமி முதலியார் ரொம்பபணக்கர்ர். உங்களை அருமையாய் வைச்சுக்கு வாங்க. பயப்படாதிங்க.

பெண்மணி:—ஏ! எனது சகோதரர்களே! நான் உங்களுக்கு என்ன செய்தேன்? ஏன் என்னை இவ்வாறு இம்சிக்கிறீர்கள்? என்னை இவ்வளவு கஷ்டப்படுத்தினது போதாதா? இன்னும் எங்கே அழைத்துக்கொண்டு போகப்போகிறீர்கள்? என்னை என் வீட்டிற்கு மறுபடியும் அழைத்துக்கொண்டு போய் விட்டுவிட்டால் நான் போட்டிருக்கின்ற நகைகளை யெல்லாம் உங்களுக்கே கொடுத்து விடுகிறேன். எனது பெற்றோருக்கு நான் ஒருபெண் தான். அவர் கள் மிக்க ஏழையா யிருந்தாலும், என்னைத்திரும்பி அடைந்த சந் தோஷத்தினால் இந்நகைகளை உங்களுக்குக் கொடுக்கச் சம்மதியாம லிரார்கள்.

வீரன்:—பேசாதே! உன் நகையும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம். வாயைப் பொத்திக்கிண்டு இருளனோடு போறியா இல்லையா? இல்லாட்டிப்போனால் இதோ பாத்துக்கோ (என்று வாளை உருவிக் காட்டினான்.)

பெண்மணி:—ஏ! ஜெகதம்பிகை! நான் என்ன பாவம் செய் தேன்? ஏன் என்னை இவ்விடர்க்காளாக்கினாய்? பிண்டிச் செல்வா! நான் உன்னைச் சரணடைந்தேன். என்னை நீர் காப்பாற்றவேண்டும் (என்று கூறிப் பின்வருமாறு தோத்திரம் செய்கிறாள்.)

ஸ்ரீ ஆதீஸ்வர ஸ்வாமி துதி.

("நடந்ததென்ன சொல்லம்மா" என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

சரணடைந் தேனருகையா
கருணை வைத்தாள்வாய் எழில்துய்யா

சரணம்.

ஆதிநாதனே யுன்னடிமை நானல்லவோ
ஆதரித்தருள்வாய் என்னய்யா
சோதிமலர்ப் பிண்டிவாமனருள் போற்றி
வாதனை தீர்த்தென்னை யாட்கொள்வாய் (சரணடை)

ஏ! ஆதிநாத பிரபோ! உன்னைச் சரணமடைந்தேன்; கருணை வைத்து உன்னடிமையாகிய என்னைக் காப்பாற்றி இவ்வேதனையைத் தீர்த்து என்னை யாட்கொள்ளவேண்டும். ஏ! என்னம்மணி! ஸ்ரீ தர்மதேவியே! முன் அகளங்க முனிவரைக் காப்பாற்றிய நீ இப்பொழுது கைவிடலாமா? ஆபத்துக்குள்ளானோர்க்கு அபயமளித்து ஆதரிப்பது உன் கடமையன்றோ? பிள்ளையைக் காப்பாற்றாத தாயும் உலகில் உண்டோ? (என்று விம்மி விம்மி அழுது பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்கிறாள்.)

ஸ்ரீ தர்மதேவி அம்மனைத் துதித்தல்.

(அச்சமுரா லாகீஸே என்ற பார்ஸி வர்ணமெட்டு)

அன்னையே உன்னைப்பணிந்தேன் அமரர்போற்று செல்வியே!
என்னைக் காப்பாற்றுவாய் தாயே
மன்னாதி மன்னர்தொழும் மாதர்ம தேவியே நீ
அருள்வாயே- அருள்வாயே- அருள்வாய் நின்னடிமை

வீரன்:—ஏ! இருளா! ஏ! காத்தா! எல்லாரும் ஒளிஞ்சுக்குங்கோ. ஒரு குதிரைவர சத்தம் கேட்கிறது. பத்திரம்! பத்திரம்!! வந்ததும் யாரா இருந்தாலும் சரி; ஒரே போடுதான். சீ! சும்மாயிருங்கோ; பயப்படாதிங்கோ; நம்ப ராமஸ்வாமி முதலியார்தான். நாழியாச்சுதே என்னு தேடிக்கிட்டு வாரார்.

(ராமஸ்வாமி முதலியார் குதிரையைவிட்டுக் கீழிறங்கிக் குதிரையை மரத்தடியில் கட்டிவிட்டு, ஓர் பணப்பையை வீரனிடத்தில் கொடுத்தார்.)

வீரன்:—(அதை வாங்கிக்கொண்டு) சாமி! நீங்கள் சொன்னபடி இந்த அம்மாளை அழைச்சுக்கினு வந்திட்டோம். நீமே உங்கபாடு பத்து, நாங்கள் போய்வரோம் சாமி நமக்காரம். (இவ்வாறு கூறியபின் திருடர் மறைந்தனர்.)

புத்திசேனன்:—(மெதுவாய் சந்திரசேகரனிடத்தில் போய் ரகஸியமாய் காதில் சொன்னதாவது):—ஏ! நண்பனே! இதுதான் நல்ல சமையம். இனி தாமதிக்கலாகாது. இதைப்போல் கொடுமைகளை இத்திருட்டுப் பாதகர்கள் எத்தனை அனுலைதகளுக்கு இழைத்து இருக்கின்றனரோ? ஆகையால் இவர் வம்சத்தைமே அழிக்கவேண்டு

மென்ற எண்ணம் என் மனதில் உதித்துவிட்டது. துஷ்ட நிக்ரகம் சிஷ்டபரிபாலனம் செய்வது தர்மிஷ்டர்களது கடமை. இதுபற்றியே பெரியோர்களும்,

"..........துர்பிக்ஷம் சௌரமாரீக்ஷணமபி ஜகதாம்
மாஸ்மபூஜ்ஜீவலோகே......"

அதாவது, பஞ்சம், திருடர், கொடிய விஷ வியாதியாகியவைகள் ஜனங்களை க்ஷணநேரங்கூட வருத்தாமலிருக்கவும் என்று ஸ்ரீ சாந்தி பக்தியில் பகவானை துதிக்கிறார்கள். ஆகையால் இவர்களைப் பின் தொடர்ந்து நான் செல்லுகிறேன். இனி நீ செய்யவேண்டியது என்னவென்றால், இப் பெண்மணியுடன் ராமஸ்வாமி முதலியார் எவ்வித சம்பாஷணை புரிகிறார் என்பதைக் கேட்டு ஏதாவது அவர் அம்மங்கைக்குத் தீங்கிழைக்கு முன்னமே கீழே இறங்கி, முதலியாரை ஒருகை பார்த்துவிட்டு அப்பெண்மணியைத் தூக்கி மரத்தில் கட்டியிருக்கும் அசுவத்தின் மீதேற்றி, விரைவாய் உன் வீடுபோய்ச் சேர்வாயாக. பிறகு அப்பெண்ணினது களைப்பை மாற்றி அவளுடைய பெற்றோரிடத்தில் அவளைச் சேர்ப்பித்து, அவளுக்கு யாதொரு தீங்கும் வாராதபடி தக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிவப்பிரகாசம் என்னுடன் வரட்டும். இந்த யானைமுகத்தடியை வைத்துக்கொள். சிவப்பிரகாசா! கொடுக்கலாமா? (என்று சிவப்பிரகாசத்தை மெதுவாகக் கேட்டான்.)

சிவப்பிரகாசம் :— (தலையை அசைக்கிறான். புத்திசேனனும் யானைமுகத்தடியைச் சந்திரசேகரனிடத்தில் கொடுத்து விட்டான். மெதுவாய் சிவப்பிரகாசமும், தானும் கீழே இறங்கித் திருடரைப் பின் தொடர்ந்து சென்றனர்.)

பெண்மணி:— அத்திருடர்கள் என்னைவிட்டு விலகும்படி அனுக்கிரகித்த தெய்வம், ராமஸ்வாமி முதலியாகிய இச்சண்டாளனிடத்திலிருந்தும் தப்புவிக்க உபாயம் அறிவிக்கவேண்டும். இவனால்தான் நான் இவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளானதாக அத்திருடர்கள் வாய்மொழியினின்றும் தெரிந்துகொண்டேன். ஆ ஹா! இது என்ன கஷ்டம்! இவனருகே வரும்பொழுதே துர்நாற்றம் வீசுகின்றதே. இவன் குடிகாரன்போல் தோற்றுகின்றதே! மேலும் தனது சௌகரியத்திற்காக எவ்வித தீங்கும் பிறர்க்குச் செய்வதற்கு அஞ்சமாட்டான்போலிருக்கின்றதே! இதுவுமன்றி அத்திருடர்கள் பண ஆசையினால் என்னை இக்கொலைபாதகனிடத்தில் கொண்டு வந்தனரேதவிர எனது கற்பையழிக்க முயலவில்லை. தெய்வமே! நான் என்ன செய்வேன். பூனைக்குத்தப்பிப் புலியின்வாயில் அகப்பட்டேன்! இப்பாதகன் காமாதுரனாய் எனது கற்பை அழிக்க இவ்வாறு சூழ்ச்சிகள் செய்திருக்கின்றனன். மாதர்களுக்குச் சிறந்த ஆபரணம் கற்பல்லவோ? இதுபற்றியன்றோ திருக்குறளாசிரியரும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்."

என்று தம் திருமறையில் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். ஆ! தெய்வமே! நான் என்செய்வேன்? எவ்வாறுய்வேன்? திரௌபதையின் மானத்தைக் காத்த ஸ்ரீ கண்ணனே இச்சமயத்தில் என்னையும் காப்பாற்றவேண்டும். கற்புள்ள மங்கையரை அக்னியும் அணுகாது. சாவித்திரி தனது கற்பின் மஹிமையால், உயிர்களை விடாது கவர்ந்து செல்லும் எமதர்மராஜனையே எமாற்றவில்லையோ? கற்பை அழிக்க முயன்ற வேடனை தமயந்தி தன் கற்பின் வன்மையால் சாம்பராய் சுட்டெரிக்கவில்லையோ? கற்புள்ளமங்கையர், தமது கற்பை அழிக்கமுயலும் காமாதுரர்களை ஈசல்களாக எண்ணித் தம்மை எவ்விதத்திலும் காப்பாற்றிக் கொள்வார்கள். இதென்ன பேதமை! கற்பை முதலாகவும் உயிரை ஊதியமாகவும் மதித்து வாழும் என்போன்ற மங்கையர்கள் ஊதியமாகும் உயிரை இழப்பார்களன்றி முதலாகிய கற்பை ஒருகாலும் இழக்கத் துணிபார்களன்றோ? பிறகு, ஏன் இப்பாதகர்கள் விளக்கில் வீழ்ந்திறக்கும் விட்டில்களைப் போல், எங்கள் கற்பை அழிக்கமுயன்று, முடிவில் எங்கள் கோபாக்கினியினுல் தஹிக்கப்படுகின்றனர்?

இராமஸ்வாமி முதலியார்:—கண்ணே! என் செல்வமே! வந்த காரியத்தைவிட்டு வீண் வார்த்தைகள் பேசவேண்டாம். இனித் தாமதிக்கலாகாது? என் கட்டிக்கரும்பே! கன்னலினும் இனியதெள்ளமுதே! எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டுமாறு வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறேன் (என்று சொல்லிக்கொண்டே அவளது கரத்தைப் பிடிக்கப்போனுன்)

பெண்மணி:—ஏ! பிரஷ்டா! கிட்டிவாராதடா! மூடா! அநாதை என்று நினைத்தல்லவோ என்னை இவ்விடர்க்காளாக்கினய் பேய் பிடித்தவர்போல ஏன் பிதற்றுகின்றாய்? முடவன் கொம்புத் தேனுக்கு இச்சைப்படுவதுபோல் துர் ஆசாரமுள்ள நீ என்னை அடைய விரும்பினுய்! நன்று! நன்று! இது உன்னுடைய குற்றமன்று. நீ அடைந்துள்ள பணமல்லவோ உன்னை இவ்வாறு நடக்கச் செய்கின்றது. இதுபற்றி யன்றோ,

"ஒல்லொழுக் கினரைத் தீய வொழுக்கரென் றுரைக்கச் செய்யும்
புல்லொழுக் கினரைத் தூய புலத்தரென் றுரைக்கச் செய்யு
நல்லகற் புடைய மாதர் நலத்தையுஞ் சாமை செய்யும்
பல்வகைத் துயரும் செய்யும் பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே"

என்று குசேலோபாக்கியான ஆசிரியர் கூறுகின்றார்; ஏ! துராத்மாவே! இப்பணத்தைக்கொண்டு ஏன் தானதருமங்களைப் புரிந்து, இரப்பவர்க்கீந்து தமது கிளையை ஓம்பக்கூடாது? தீய விஷயங்களுக்கு ஏன் அப்பொருளைச் செலவிடவேண்டும். உனது பணக்கொழுப்பால் எத்தனை பெண்களை வருத்தினாயோ எத்தகைய்கொடுமைகளை நீ அஞ்சாமல் புரிந்தாயோ? சர்வ சாட்சிபாகிய சர்வஞ்ஞனே உனக்கு நற்புத்தி புகட்டவேண்டும். என்னைக் கண்மணியென்றும், கரும்பென்றும் ஏன் அழைக்கின்றாய்? இது குடியர்கள், குடிவெறியால் புலம்பும் புலம்பலே தவிர வேறல்ல. உயிரைத் துறப்பதற்குத் துணிந்த நான் உன்னைத் துரும்பாயல்லவோ நினைக்கின்றேன். ஆதலால் நீ என்னை வருத்தாமல் இவ்விடத்தைவிட்டு அகன்றுவிடு; ஏன் திகைத்து நிற்கின்றாய்? நீ சொல்ல வேண்டியவற்றை ஒளியாமல் கூறு.

இ. முதலியார்:—ஏ! எனது அருமை லீலா!

லீலா:—(திடுக்கிட்டு) ஏ! பாதகா! எனது பெயர் உனக்கு எப்படித் தெரியும்? எனக்கு இக்கஷ்டத்தை விளைவிக்கப் பல நாளாகவே நீ முயன்று வருகிறாய்போல் தோன்றுகின்றது. ஆ! தெய்வமே! "எனது அருமை லீலா" என்று என்னை இப்பாதகனோ அழைப்பது! இவ்வளவிற்கும், தரித்திரத்தோடு கூடிய என் வனப்பல்லவோ காரணம்! ஆனதால்தான், "......நல்கூர்ந்தா ரின்னலும், பூத்தலிற் பூவாமை நன்று" என்று பெரியோர் புகன்றனர். நான் ஏன் பிறந்தேன்? இருப்பதைவிட இருப்பதல்லவோ நலம்.

இ. முதலியார்:—கண்ணே! நீ கலங்கவேண்டாம். எனது ஆஸ்தி முழுவதும் உனக்கே தருகிறேன். நீ காலால் இட்ட வேலைகளைத் தலையால் செய்வேன். எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றினால் உன்னையும் உனது கிளைஞரையும் ஆயுட்காலம் வரையில் நான் திண்ணமாய் காப்பாற்றுவேன். சென்றமாதம் சண்பகாபுரிக் கோவிலில் திருவிழா பார்க்கவந்தபோது நீ வேடிக்கையாக மற்றொரு பெண்ணின் தோளின்மேல் சாய்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கையில் அவ்வழியிற் சென்ற எனக்கு உன்னை எவ்விதத்திலும் அடையவேண்டுமென்ற விருப்பம் மேலிட்டு, நான் பலநாளாக முயன்று முடிவில் இச்சூழ்ச்சியைச் செய்தேன்; ஆதலால் கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என்று பயந்து விரைவாய் இவ்விடம் வந்தேன்.

லீலா:—(புன்னகை புரிந்து) உமக்கு என்ன வயது?

இ. முதலியார்:—ஐம்பத்திஆறு வயதுதான், எனது தேகக்கட்டைப் பார்த்தோர் முப்பது வயதுதான் மதிப்பார்கள்.

லீலா:—உமக்குப் பெண்சாதிகள் எத்தனைபேர், பிள்ளைகள் எத்துணைபர்?

இ. முதலியார்:—பெண்சாதி மூவர்; பிள்ளைகள் ஐவர். மானே! என் மரகதமே! அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம். உனது அன்ன நடையும், நுண்ணிய நுசுப்பும், கன்னலினுமினிய சொல்லும், மதிமுகமும், வேயனைய தோளும், பிறைநுதலும், கெண்டைமீனைப்பழித்த கண்ணும், முத்தைப்போன்ற பல்லும், என் மனதைக் கொள்ளை கொண்டதால் நான் உனக்கே என் ஆஸ்தி முழுதும் சேரும்படி செய்கிறேன்.

லீலா:—(தனக்குள் இனித்தாமதிக்கலாகாது; இவனோடு பேசிக் காலம் கழிக்கலாகாது; இம்மூடனது கர்ணகடூரமான வார்த்தைகள் எனது நெஞ்சில் புண்ணில் தீ நுழைவதுபோல் இருக்கின்றன. சிங்கத்தை ஏமாற்றிய நரியைப்போல இவனை நாம் ஏமாற்றிச் செல்லவேண்டும். இவன் காதல் வெறியால், நாம் என்ன வேலை சொல்லினும் கேட்பான். தந்திரமாக இவனை ஏமாற்றவேண்டும். இன்னாரை என்று குறிப்பிடாது "நான் வரிப்பேன்" என்று கூறில், இம்மூடன் தன்னை வரிப்பதாக எண்ணுவான், பிறகு இப்பாதகனை விட்டு விலகும் உபாயத்தைத் தேடுவேன் என்று தீர்மானித்துக் கொண்டு அவனை நோக்கி முதலியாரே! "நான் வரிப்பேன்" என்றாள்.

இ. முதலியார்:—(உள்ளத்தில் உவகைக் கடல்பெருகி) அதுதான் நான் வேண்டுவது கண்ணே! அதுதான் நான் வேண்டுவது என்று கூறி அவளது கரத்தைப்பற்ற முயன்றான்.

லீலா:—முதலியாரே! நீர் என்ன "ஆக்கப்பொறுத்தாலும் ஆறப்பொறாதவர்" போல் தோன்றுகின்றீரே! உமக்கும் நமக்கும் சரிப்படாது என்று கூறிக் (கண்சிவப்பச் சற்று விலகி நின்று) நண்பரே! எனக்கு மிக்க தாகமாய் இருக்கின்றது. ஓர் டம்ளர் ஜலம் வேண்டும். இக்காட்டில் ஜலம் இருக்குமிடம் எனக்குத் தெரியாதே! என் செய்வது? ஜலம் கிடைக்காவிடில் நான் உயிர்துறப்பது திண்ணம் என்றாள்.

இ. முதலியார்:—கண்ணே! இதுதானு நீ வேண்டுவது? ஸ்பென்ஸர் ஸோடாவில் ஒருடோஸ் "விஸ்கி" சேர்த்துச் சாப்பிட்டால் அது எவ்விதகளேயையும் மாற்றும்; இதோ! சாப்பிடு என்று தமது பிரீஷ் பாக் (**Brich Bog**)கிலிருந்து அவற்றை எடுத்துக்கலந்து, ஓர் டம்ளரில்விட்டு நீட்டினர்.

லீலா:—(தனது முகத்தைத் திருப்பிக்கொண்டு) இதெல்லாம் எனக்கு வேண்டாம்; நான் வேண்டுவது ஜலமே.

இ. முதலியார்:—(சிரித்துக்கொண்டு நீ ஏழைவீட்டில் பிறந்தவளாகையால், இவையெல்லாம் சாப்பிட்டுப் பழக்கமில்லைபோலும். நல்லது, ஒரு நிமிஷத்தில் ஜலம் கொண்டுவருகிறேன்) என்று கூறி டம்ளரிலிருந்த பானத்தை வயிறாக் குடித்துவிட்டு அந்தக் கண்ணாடி டம்ளரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

லீலா:—நில்லும் ஒருவார்த்தை; டம்ளரை சுத்தமாகத் துலக்கிவிட்டு ஜலம் கொண்டு வரவேண்டும்.

இ. முதலியார்:—அப்படியே செய்கிறேன்.

லீலா:—இன்னும் ஒரு வேண்டுகோள்: உமது மேலங்கியையும் வாளேயும் என்னிடம் கொடுத்துப் போகவேண்டும்.

இ. முதலியார்:—ஏன்?

லீலா:—மற்ற ஆடவர் உபத்திரவத்திற்கு அஞ்சி ஆணுடை தரிக்கவிரும்புகிறேன்.

இ. முதலியார்:—(அப்படியே ஆகட்டும்) என்று கூறி பீரீப்பாக்கைத் திறந்து சலவை பண்ணின மற்றொரு மேலங்கியையும் காலங்கியும் கொடுத்து வாளேயும் ஈந்து டம்ளரை எடுத்துக்கொண்டு விரைவில் சென்றார்.

(மரத்தில் மறைந்திருந்த சந்திரசேகரன் கீழே இறங்கி அப்பெண் மணியின் முன்னிற்கிறான். அப்போது)

சந்திரசேகரன்:—அம்மணி! பயப்படாதீர்கள் நான் தங்களுக்கு உதவிபுரியக் காத்துக்கொண்டிருந்த நண்பன், தாங்கள் செய்தது நல்ல சூழ்ச்சி, தாமதிக்கலாகாது, அவன் வந்து விடுவான், சீக்கிரத்தில இவ்வாணுடையைத் தரித்து, வாளே யெடுத்துக்கொண்டு, அசுவத்தின் மீதேறி விரைவில் செல்லவேண்டும், இல்லாவிடில் வந்தது மோசம்.

லீலா:—“அகத்தினது அழகு முகத்தில் தெரியும்” என்பதற் கிணங்க, அவன் முகத்தில் விளங்கிய நற்குறியைப் பன்முறையுட், உற்றுநோக்கி, இவன் மித்துருவே தவிர, சத்துருவல்லவென்று மீ்த திச் சீக்கிரத்தில் ஆணுடைதரித்து, அசுவத்தின் மீதேறிச் சந்திர சேகரனுடன் சென்றனள்.

நான்காம் அத்தியாயம் முற்றும்.

கிக்கில் அ. ஜீவேந்திரன்.

𑌶𑍍𑌰𑍀𑌜𑌿𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋𑌤𑍍𑌤𑌰 𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌮𑌾𑌲𑌾

ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-12, பக்கம்-264.)

𑌵𑍇𑌶𑍍𑌯𑌾

11. 𑌯𑌾𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰 𑌵𑌿𑌟𑌕𑍋𑌟𑌿 𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌦𑍍𑌯𑌮𑌾𑌂𑌸 𑌨𑌿𑌰𑌤𑌾𑌤𑌿
𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌾
𑌕𑍋𑌮𑌲𑌾 𑌵𑌚𑌸𑌿 𑌚𑍇𑌤𑌸𑌿 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾 𑌤𑌾𑌂 𑌭𑌜𑌂𑌤𑌿 𑌗𑌣𑌿𑌕𑌾𑌂
𑌨𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌃

யாவிசித்ரவிடகோடி நிக்ரஷ்டா மத்யமாம்ச நிரதாதிநிக்ரஷ்டா
கோமலாவசஸி சேதஸிதுஷ்டா தாம்பஜந்தி கணிகாம் நவி
[சிஷ்டா.

(இ-ள்.) அநேக விட புருஷர்களினாலே, சேவிக்கப்பட்டவளாயும், கள் மாம்சம், இவைகளில் பிரீதியுள்ளவளாயும், அதி நீசளாயும், மதுரவார்த்தை சொல்பவளாயும், துஷ்ட மனதுள்ளவளாயும் இருக்கின்ற வேச்யாஸ்திரீகளை சஜ்ஜனர்கள் சேவிப்பதில்லை.

12. 𑌤𑌪𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌯𑌶𑍋𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑍁𑌲𑍀𑌨𑌤𑍍𑌵𑌂 𑌦𑌮𑍋𑌦𑌯𑌾
𑌛𑌿𑌦𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑍇𑌶𑍍𑌯𑌯𑌾𑌸𑌦𑍍𑌯𑌃 𑌕𑍁𑌠𑌾𑌰𑍇𑌣 𑌯𑌥𑌾𑌲𑌤𑌾

தபோவ்ரதம் யசோவித்யா குலீனத்வம் தமோதயா
சிந்த்யம் தேவேச்ய யாசத்யஹ குடாரேண யதாலதா.

(இ-ள்.) கோடாலியினாலே கொடியை வெட்டுவது எவ்வளவு சுலபமோ அதுபோல வேச்யையினுடைய சங்கமத்தினாலே, மனுஷ்யர்களுடைய, தபம், வ்ரதம், கீர்த்தி, வித்யை, குலீனதே, பொறுமை, தயை, இவைகளைப் போக்கடிப்பது சுலபம். இன்னும்,

13. [illegible]
[illegible]

விமோகய தியாசித்தம் சம்த்ரஷ்ட வாதூரமேதாபிவா
ஹேயா சத்பிஸ்த்ரிகாணான்மத்ய மாம்சவிடம்பிதா.

(இ-ள்.) தாசியானவள், மத்ய, மாம்சங்களை, ப்ரீதியுடன் சேவிக்கின்றவள்; இன்னும் பார்ப்பவர்களுடைய அந்தக் கரணத்தை தூரத்திலிருந்தபடியே மோகத்திற்குட்படுத்துபவள். ஆகையினாலே, சஜ்ஜனர்கள், மன, வசன, காயங்களினாலே அந்த வேச்யை விட்டுவிடவேண்டும்.

வேட்டை.

14. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

சாந்திதூர்வாம் விசாந்திகானனே பிபம்பந்தி தோயான்ய பரிக்ர [காணி
விஞபாதம் ஹரிணாந்நிஹந்தி யேகதம்ததன்யன் கலுதேப்ய [வந்தி.

இ-ள். புல்லைத்தின்று பாத்திரமில்லாமலே தண்ணீரைக் குடித்து வனத்தில் திரிந்துகொண் டிருக்கிற மான்களை அபராதமில்லாமலே கொல்லுகின்றவர்கள், அன்ய ஜீவன்களை ரக்ஷிக்கிற தெப்படி? இன்னும்.

15. [illegible]
[illegible]

நிராகசான் பராதீனான் னச்பதோ பயவிஹ்வலான்
முகலக்னத்ருணான் க்னந்தியே தெகச்சந்திஸ்வப்ரகே.

இ-ள். மானனது, நிருபத்ரவமாயும், பராதீனமாயு மிருக்கிறது. இன்னும் பயத்தினாலே கண்மண் தெரியாமல் வாயிலிருக்கிற புல்லோடு கூட அதனை மெல்லாமலே ஓடிப்போய் விடுகிறது. இப்பேர்பட்ட மானைக் கொல்லுகின்றவர்கள் நரக மடைகின்றார்கள்.

களவு.

16. [illegible]
[illegible]

சௌர்ய கர்மாதாயே தெநிவிஷ்டா ஹர சூவிகோபரி
கண்டாச்சுப்ரபத்தாஸ் தெத்ரச்யந்தே நிகடான்விதாஹ

(இ-ள்.) அரசர், கள்ளர்களை, கழுவிலேற்றுகின்றனர். அக்கள்ளர்கள் ஜீவாந்திர சிக்ஷை முதலாக அனேக துக்கங்களை இகலோகத்தி லனுபவிக்கின்றனர். இன்னும்,

17. 𑌨𑌿𑌵𑌸𑌂𑌤𑌿 𑌬𑌂𑌦𑌿𑌗𑍇𑌹𑍇 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰 𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁 [𑌷𑌾𑌃
𑌪𑌰𑌧𑌨𑌹𑌰𑌣 𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚𑍌𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌦𑍁𑌃𑌖𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌃

நிவசந்திபந்திகே ஹேவஸ்திராலங்கார வர்ஜிதா புருஷாஹா
பாதனஹரண நியோகாச் சௌராஸ்தேதுக் கபோக்தாரஹ

(இ-ள்.) அன்னியர்களுடைய ஆடையாபரணங்களை அபகரிக்கின்ற திருடர்கள், வஸ்திராலங்கார மில்லாமல் காரா கிரகத்தில் போய் (ஜெயில்கானாவில் போய்) துக்கங்களை அனுபவிக்கிறார்கள்.

பரஸ்திரீ

18. 𑌵𑌧𑌂 𑌬𑌂𑌧𑌂 𑌧𑌨𑌭𑍍𑌰𑌂𑌶𑌂 𑌶𑍋𑌕𑌂 𑌤𑌾𑌪𑌂 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌂
𑌆𑌯𑌾𑌸𑌂 𑌕𑌲𑌹𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌪𑌾𑌰𑌦𑌾𑌰𑌿𑌕𑌾𑌃

வதம்பந்தம் தனப்ரம்சம் சோகம் தாபம் குலக்ஷபம்
ஆயாசம் கலகம்யாத்தும் லபதேபாதாரிகஹ

(இ-ள்.) பரஸ்திரீகமனம் செய்கின்ற பாமா புருஷன், ஹிம்சை, ஜெயில் தனஹானி, துக்கம், சந்தாபம், சந்ததி நாசம், ச்ரமம், இன்னும், சண்டை, இவைகளை அடைந்து கடைசியில் மரணத்தையுங்கூட அடைகிறான். இன்னும்,

19. 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌖𑌲𑌨𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕𑌦𑌲𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌨𑌂
𑌗𑌾𑌂𑌭𑍀𑌰𑍍𑌯𑍋𑌨𑍍𑌮𑌥𑌨𑌂 𑌸𑍍𑌵𑌕𑌾𑌯𑌦𑌮𑌨𑌂 𑌨𑍀𑌚𑌤𑍍𑌵𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌂
𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌵𑌰𑌣𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌹𑌰𑌣𑌂 𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌵𑌾𑌰𑍋 [𑌪𑌣𑌂
𑌧𑌿𑌕𑍍𑌕𑌷𑍍𑌟𑌂 𑌪𑌰𑌦𑌾𑌰𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌨𑍍𑌨𑌭𑌾𑌜𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂

சன்மார்க்கஸ்கலனம் விவேகதலனம் ப்ராஞானநேத்ரோன் மூலனம்
காம்பீர்யோன் மதனம் ஸ்வகாய தமனம் நீசத்வசம் பாதனம்
சத்யானு வரணம் ஸ்வதர்ம ஹரணம் பாபப்ரபாபோ ருணம்.
திக்கஷ்டம் பரதாரவீக்ஷண மபிக்லேசான்ன பாஜம்ந்ருணாம்.

(இ-ள்.) பரஸ்திரீகளுடைய கமனத்தினாலும், சகாமத்ருஷ்டியினின்றும், பரஸ்திரீ பார்வையினாலும், மனுஷ்யன், அநீதிமார்க்கத்தை அனுசரித்தும், விசாரசூன்யனாயும், புத்தி ஹீனனாயும், தைர்யரகிதனாயும், துக்கியாயும், அதிநீசனாயும் ஆகின்றான். இவைமாத்திரமல்ல; மேலும் உத்தமமான த்யானத்தை

யும், ஸ்வதர்மத்தையும் போக்கடித்துக் கொண்டும், பாபமென்கிற சம்பத்தை பூர்ணமடையச்செய்கிறான். ஆகையினாலே எந்தப் புருஷனும், பரஸ்திரீகளைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கக்கூடாது.

20. ஹே குரோ, கே ஜீவா நரக காமினோ பவந்தி ?

ஓ குருவே! நரகத்திற்குப் போகிற ஜீவன்க ளெவைகள் ?

தர்மத்வம்ஸகரா: ஸதாதிக்ரமணா நிந்த்யா ரதாஸ்த்ஸகரா:
ராத்ரௌ போஜநதத்பரா விஷயிண: க்ரோதாதிபி:
[பூரிதா:
பெதுஷ்டா: பரதாரவீக்ஷணபரா: ஸம்யக்த்வஹீநா நரா:
யாந்த்யேதே நரகம் ஸதாவ்யஸநிந: பூஜாதி கர்மச்யு
[தா:

தர்மத்வம் சகராஹா சதாதிக்ர பணாநிந்த்யா ரதாஸ்தஸ்காராஹா
ராத்ரௌ போஜன தத்பராவிஷயிண ஹக்ரோதாதிபிஹி பூரி
[தாஹா
பெதுஷ்டா பரதாரவீக்ஷணபராஹா சம்யக்த்வ ஹீனாநராஹா
யாம்த்யேதே நரகம் சதாவ்யசனினஹ பூஜாதி கர்மச்சுதாஹா

(இ-ள்.) தர்மகார்யத்திற்கு ப்ரதிபந்தம் செய்கிறவர்களும், எப்படியாவது, தர்மகார்யமல்லாமல் வீணாய்த் தனத்தைச் செலவு செய்பவரும், கெட்ட நடத்தையுள்ளவரும், பாகாரங்களிடத்தில் ஆசக்தமுள்ளவர்களும், இரவில் போஜனமுண்பவர்களும், விஷயலம்படர்களும், அதிக கோபமுள்ளவர்களும், துஷ்டர்களும், பரஸ்திரீகளை கெட்ட எண்ணத்தால் பார்ப்பவர்களும், சம்யக்த்வமில்லாதவர்களும், துர்வ்யசனிகளும், பூஜாதி ஷட்கர்மங்களில்லாமல் ப்ரஷ்டானவர்களும் நரகத்திற்குப் போகிறவர்கள்.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்,
அனந்தபுரம் ஸ்கூல்டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

சென்னை-600 ... 21057

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயாவிநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திரஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரபுவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயமுயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக் கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளையெல்லாம் கைப்பற்றிக்கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, [illegible]களை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புறத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கியிருக்கின்றன. விலை அணா 6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பலகதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில், தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற்புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப்பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசைபெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை. பெண்பிள்ளை திருடனைப்பிடித்த கதை, செளிகொடுத்தகதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப்பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச்சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும்போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப்புலவர் கதை, பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக்கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையானவேலை எஜமான் இன்னாரென்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கியிருக்கின்றன. சகலரும் வாங்கிப்படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்புள்ள நாவல். நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது. விலை அணா 10.

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது. விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதிற் படித்துணரத் தக்கது. விலை அணா 4.

சீவகசிந்தாமணி வசனம்.

இது, சீவகசிந்தாமணிச் செய்யுட்களைத் தழுவி யெழுதப்பட்டது. இதில் நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம் இரண்டுமே அடங்கி யிருக்கின்றன. விலை ரூ. 1—4—0

மேருமந்தர புராணம் மூலமும் உரையும்.

1-வது சருக்கம் விலை அணா 6
2-வது சருக்கம் விலை அணா 5
3-வது சருக்கம் விலை அணா 8

ஜினபாரதம் விலை அணா 6
சமந்தபத்திராசாரியாரின் திவ்ய சரித்திரம் விலை அணா 1
ஸ்தோத்திரச் செய்யுட் கோவை விலை அணா 1
ஜீவசம்போதனை முதற்பாகம் விலை அணா 12

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப் பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாக் கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி யிலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு, முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா 5

தருமசீலன் புக்டிபோ,
1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.